**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.17** **நாள்: 19.01.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம் திருவான்மியூரில் இயங்கி வந்த AYUSH மருந்தகம் கிண்டி மடுவின்கரையில் உள்ள மாநகராட்சி நல வாழ்வு மையத்தில் செயல்படவுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி தெற்கு வட்டாரம் அடையாறு மண்டலம், கோட்டம் 182 திருவான்மியூர் நகர நல வாழ்வு மையத்தில் இயங்கி வந்த AYUSH மருந்தகம் அடையாறு மண்டலம், கோட்டம்–174 கிண்டி மடுவின்கரையில் உள்ள மாநகராட்சி நல வாழ்வு மையத்தின் முதல் மாடியில் வருகின்ற 23.01.2019 புதன்கிழமை முதல் செயல்படவுள்ளது.

இந்த AYUSH மருந்தகத்தில் ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி சார்ந்த AYUSH Clinic நான்கு மருத்துவர்கள் மற்றும் 1 யோகா பயிற்றுனருடன் இயங்கி வருகிறது. இங்கு தினந்தோறும் சராசரியாக 30 முதல் 40 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி சார்ந்த AYUSH மருந்தகத்தற்கு தற்போது இயங்கிவரும் அடையாறு மண்டலம், கோட்டம் 182 திருவான்மியூர் நகர நல வாழ்வு மையத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், அடையாறு மண்டலம், கோட்டம்–174 கிண்டி மடுவின்கரையில் உள்ள மாநகராட்சி நல வாழ்வு மையத்தில் 5 அறைகள் கொண்ட முதல் மாடியில் செயல்படவுள்ளது. மேலும், AYUSH மருந்தகம் இயங்கி வந்த இடத்தில் தெற்கு வட்டாரத்திற்கான (மண்டலம்–11 முதல் 15வரை) குடிநீர் பகுப்பாய்வு கூடம் இயங்க உள்ளது.

AYUSH மருந்தகம் கிண்டி மடுவின்கரை பகுதிக்கு இடம் மாற்றம் செய்யப்படுவதால், கிண்டி, மடுவங்கரை, கன்னிகாபுரம், நேரு நகர், நரசிங்கபுரம், மசூதி காலனி, கக்கன் நகர், அம்பேத்கார் நகர் மற்றும் கிண்டி ஆதம்பாக்கம் சுற்றியுள்ள பகுதி வாழ் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**